## மனிதவள அபிவிருத்திக்கான இலங்கை தேசிய சபை - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மனிதவள அபிவிருத்திக்கான இலங்கை தேசிய சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுளுக்கு அமைவாக எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அந்த ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள

இந்நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிலையமானது கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அந்த ஆளுகைக்குட்பட்டதரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் துணைப் பிரிவின் பிரகாரம், நிலையத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு சபையானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

முழுமையாக எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக் கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவே அன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானவாறும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக கவனம் செலுத்தும் போது நிலையத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறு அதன் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதும், அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்க" ர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- யாதேனுமொரு எழுத்து மூலமான சட்டம் அல்லது நிலையத்தின் பணிப்பாளர் சபையினால் வெளியிடப்பட்ட விசேட கட்டளை தொடர்பாக இணங்கியிருந்ததா என்பதும்,
- தமது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும்,
- வளங்கள் கால வரையறைகளின் உள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கு இணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க" ர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளல், பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்தல், முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதித்தல், பதிவு

செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்தல், ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் என்பன நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவனத்திற்குத் தேவையாக உள்ளது.

### 1.5.2 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

| குறித்த தர முன்னளிப்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 7 இன் 49 ஆவது பந்தியின் பிரகாரம் யாதேனுமொரு ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண உருப்படிகளை மீள் மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்துக்கள் உரித்தாகின்ற ஆதனங்கள், பொகுத் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் வகுப்பினை முழுமையாக மீள் மதிப்பீடு செய்ய வேண்டி போதிலும் சபைக்குச் சொந்தமான செலவினம் ரூ.15,129,207 பெறுமதியான சொத்துக்களில் 06 உருப்படிகளின் கூட்டுத் தொகை ரூ.728,530 பெறுமதியான சொத்துக்கள் மாத்திரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 2018 ஆம் அண்டிலே எதுவத சொத்தும் மீள் மதிப்பீடு செய்யப்படவில்லை. அதற்கு முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீடுகளின் போது இந்த தவறு இடம்பெற்றுள்ளதுடன், எதிர்வரும் மீள் மதிப்பீட்டின் போது நியமங்களுக்கு ஏற்ப மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மீள் மதிப்பீடு செய்யும் போது இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மலேசியாவின் புத்ரஜயா பல்கலைக்கழகத்திற்கு மேலதிகமாக செலுத்திய ரூ.219,007 (U.S.D. 1400) பெறுமதியான தொகை மீளச் செலுத்தி இருந்ததுடன், அத்தொகையினை பயிற்சி நிகழ்ச்சித் திட்டக் கணக்கிற்கு வரவு வைத்தமை காரணமாக பயிற்சி நிகழ்ச்சித் திட்ட செலவினம் மற்றும் நானாவித வருமானம் என்பன அத்தொகையால் மேலதிகமாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிலே இவ்வாறான தவறுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களை சரியாக தயாரிப்பது தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) ரூ.416,109 பெறுமதியான பௌதீக ரீதியில் இல்லாத சொத்துக்கள் மீளாய்வு ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் பொறித்தொகுதி மற்றும் உபகரண உபகரண பெறுமதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் மற்றும் பௌதீக ரீதியில் உள்ள பொருட்கள் என்பவற்றினை ஒப்பீடு செய்து கூற்றினை திருத்திக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | சொத்துக்களை கணக்குகளில் பதியும் போது அவற்றின் பௌதீக ரீதியான தன்மை பற்றியும் கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) மீளாய்வு ஆண்டிலே ரூ. 271,262 பெறுமதியான தொகையினை செலவிட்டு கொள்வனவு செய்த கணினி மென்பொருட்களின் பெறுமதியானது நடைமுறை அல்லாத சொத்துக்களாக இனங்காணப்பட்ட போதிலும் ஆண்டிற்குரிய செலவினமாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிலே இந்தச் செலவினமானது, செலவுகளில் இருந்து அகற்றி நிலையான சொத்து ஒன்றாக கணக்குகளில் பதிவதற்கும் மற்றும் இவ்வாறான தவறுகள் தொடர்ந்தும் இடம்பெறாமல் இருப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. | சொத்துக்களை சரியான முறையில் கணக்குகளில் பதிவது தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஈ) சபைக்குக் கிடைக்கப் பெற்றிருந்த மூலதன கொடைகளில் ரூ.9,048,188 பெறுமதியான தொகை அபிவிருத்திச் செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் மீண்டுவரும் தன்மையுடைய மூலதனக் கொடைகளாக ரூ.6,245,189 தொகை மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. | இத்தவறுகளை நாட்குறிப்புக்கள் மூலம் திருத்தம் செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு எதிர்வரும் ஆண்டிலே சரியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) 2016 ஆம் ஆண்டிற்கான ஊழியச் சந்தை கணக்கெடுப்பு (Labour Market Survey) அறிக்கை ஒன்றினைத் தயாரிப்பதற்காக ரூ.250,000 பெறுமதியான தொகையினை ஒதுக்கி குறித்த பணியினை கொழும்பு பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்துள்ள போதிலும் அப்பணி இடம்பெறுவதில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொண்டுள்ள போதிலும், அதற்காக ஒதுக்கிய தொகை இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பொறுப்புக்களாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிலே இந்த ஒதுக்கங்களை நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு இணக்கம் தெரிவிக்கனிறேன். | பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளல் மற்றும் குறித்த பணியினை தகைமை பெற்ற தரப்பினர் ஊடாக மேற்கொள்ளல் என்பன பக்கம் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஊ) மூலதனக் கொடைகள் ஊடாக கொள்வனவு செய்த சொத்துக்களுக்கு குறித்த பெறுமானத் தேய்வு பெறுமதி மாத்திரம் நிறுத்தி வைத்தல் வருமானங்களாக ஆண்டிற்கான வருமானங்களாக இனங்காண வேண்டியுள்ள போதிலும், சபையினால் கூட்டுத் தொகை ரூ.4,101,235 பெறுமதியான ஆண்டிற்குரிய மொத்த பெறுமானத் தேய்வு தொகையும் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. | மூலதன கொடைகளில் இருந்து கொள்வனவு செய்த சொத்துக்களை இனங்காணுவதற்காக தகவல்கள் சபையிடம் இல்லாமையால் ஆண்டிற்குரிய முழுமையான பெறுமானத் தேய்வு தொகையும் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் மூலதனக் கொடைகளில் இருந்து கொள்வனவு செய்த சொத்துக்களை தனியாக இனங்காணக் கூடியவாறு ஆவணங்களை பேணிவருதல் வேண்டும். |

**1.6 சட்டங்கள் ஒழுங்கு விதிகள், விதிமுறைகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றிற்கு இணங்காமை**

---

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.**

| சட்டங்கள் ஒழுங்கு விதிகள், விதி முறைகள் என்பன பற்றிய கவனம் | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 2003 யூன் மாதம் 02 ஆம் திகதிய இல. 2003 PED/12 உடைய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை யின் 4.2.2 பந்தி | சபையினால் திட்டமிட்ட நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான முன்னேற்றத்தை பரீட்சிப்பதற்காக கூட்டங்கள் மாதாந்தம் நடாத்த வேண்டியுள்ள போதிலும் 2018 ஆம் ஆண்டினுள் 4 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அந்த கூட்டங்களும் மேற்கூறிய சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த தேவைகள் நிறைவேற்றப்படும் வகையில் பயன்மிக்க முறையில் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 1997 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், அதிகார ரீதியாக நியமிக்கப்படுகின்ற அலுவலர் கூட்டத்தில் பங்கேற்றல் வேண்டும். செயல்முறை தன்மைகளின் மீது அனைத்து அலுவலர்களையும் பங்கேற்கச் செய்வது கடினமாக உள்ளது. இதற்கான தீர்வாக நிருவாக சபையின் கூட்டமைவை மாற்றுவததற்காக பின்வரும் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நாட்டின் மனிதவள அபிவிருத்தி செய்வது தொடர்பாக கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுப்பதற்கு தேவையான வழிகாட்டல்களை வழங்கும் பொருட்டு தேசிய மட்டத்தில் இயங்குகின்ற இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் முக்கிய துறைகளை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அரச நிறுவனங்களில் உயர் பதவி வகிக்கும் அலுவலர்கள் நிருவாக சபைக்கு முன்மொழியப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படுகின்றது. பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மற்றும் கூட்டமைவினை திருத்தம் செய்கையில் மேற்குறிப்பிட்ட தேசிய முக்கியத்துவம்பற்றி கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) 1997 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க மனிதவள அபிவிருத்திக் கான இலங்கை தேசிய சபை சட்டத்தின் 14 (I) பந்தி | மனிதவள அபிவிருத்தி பற்றிய சட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றினை அரசாங்கத்திடம் சமர்ப்பித்தல் மற்றும் அவற்றினை அமுல்படுத்துவது தொடர்பாகவும், தேசிய மனிதவள அபிவிருத்திக் கொள்கையினை அமுல்படுத்தல் தொடர்பாகவும்சபையினால் அமைச்சருக்கு ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் என்பன | சபையினால் தயாரிக்கப்படுகின்ற அனைத்து முன்மொழிவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்கு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்கள் பங்கேற்புடன், அது பற்றி பிரதம அமைச்சர் அவர்களுக்கும் விழிப்பூட்டப்பட்டுள்ளது. எனினும் செயல்முறை தன்மைகள் மீது அது | சபையினால் அமுல்படுத்துகின்ற நினழ்ச்சித் திட்டங்களின் இறுதி நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்களை விழிப்பூட்டல் மற்றும் துறைசார்ந்த மேம்பாட்டிற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ள போதிலும், மாதிரிகளை பரீட்சித்தலுக்கு உட்படுத்தப்பட்ட 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பில அவ்வாறான ஒன்று இடம்பெற்றிருக்கவில்லை. | பற்றிய எழுத்துமூல தகவல்களை பேணிவர முடியாது போயுள்ளது. எவ்வாறாயினும் எதிர்வரும் காலங்களில் குறித்த எழுத்து சாட்சிகளை பேணி வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் பெறுபேறு

மீளாய்வு ஆண்டின் தொழிற்பாட்டு பெறுபேறு ரூ.5,596,047 தொகை மிகையினை கொண்டிருந்ததுடன், அதற்கு ஒப்பீட்டளவில் கடந்த ஆண்டின் மிகை ரூ.4,167,580 ஆகும்.அதன் பிரகாரம் நிதிப் பெறுபேற்றின் ரூ.1,428,467 தொகை பெறுமதியான விருத்தி ஒன்றினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்த விருத்திக்கு வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக கிடைக்கப் பெற்ற உழைத்த வருமானமானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ.1, 264,793 பெறுமதியான தொகையால் அதிகரித்தமை பிரதான காரணமாக அமைந்திருந்நது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவின விடயங்களின் முன்னேற்றப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டிலே சபையின் வருமானம் ரூ.3,250,808 பெறுமதியான தொகையால் அதிகரித்துள்ளதுடன், அந்த அதிகரிப்பிற்கான பிரதான காரணம் அரசாங்க கொடைகள் ரூ.2,866,786 பெறுமதியான தொகையாலும் மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக உழைத்த வருமானம் ரூ.1,264,793 பெறுமதியான தொகையால் அதிகரித்தமையாகும். கடந்த ஆண்டிலே சொத்துக்களை அகற்றியமை மூலம் ரூ.1,068,524 பெறுமதியான நட்டம் ஏற்பட்டிருந்த போதிலும் மீளாய்வு ஆண்டிலே அத்தொகையானது ரூ.177,461 வரையில் குறைவடைந்திருந்தது. அவ்வாறே மீளாய்வு ஆண்டின் அரசாங்க கொடைகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ.2,320,569 தொகையால் மற்றும் பயன்பாட்டு சேவைகளின் செலவினம் ரூ.1,012,829 தொகையால் அதிகரித்திருந்த போதிலும், பெறுமானத் தேய்வு மற்றும் பராமரிப்புச் செலவினம் முறையே ரூ.1,588,611 தொகையால் மற்றும் ரூ.409,121 தொகையால் குறைவடைந்திருந்தது.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.3,000,000 பெறுமதியான பங்களிப்பு மூலதனப் பெறுமதி எந்த வழியில் கிடைத்தது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு குறித்த தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தில் தற்போதுள்ள அலுவலர்களுக்கு இது பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை. இது பற்றி தொடர்ந்தும் தகவல்களை பரீட்சிப்பதற்கு ஆலோசனை கிடைக்கப் பெற்றுள்ளது. | இது பற்றிய தகவல்களைப் பரீட்சித்துப் பார்த்து கணக்காய்விற்கு அறிக்கையிடல் வேண்டும். |

**3.2 தொழிற்பாட்டு செயற்றிறனின்மை**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**3.3 நெறிமுறையற்ற கொடுக்கல் வாங்கல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)1997 ஆண்டின் 18 இலக்க மனித வள அபிவிருத்திக்கான, இலங்கை தேசிய சபை சட்டத்தின் பந்தி இலக்கம் 16(2) (1)(ஒ) மூலம், மனித வள அபிவிருத்தியின் பல்வேறுபட்ட துறைகளின் நிபுணத்துவக் குழாத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் சபை உத்தியோகத்தர்களின் திறமையை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இருந்தாலும் இந்த நடவடிக்கையை எடுக்காமல் வெளி நிபுணத்துவ சேவையைப் பெற்றுக் கொள்ளுவதற்காக வருடாந்தம் குறிப்பிடத்தக்க அளவு தொகையொன்று செலவு செய்யப்பட்டுள்ளதுடன் மீளாய்வு ஆண்டுக்குள் மாத்திரம் ரூ.1,262,025 செலவு செய்யப்பட்டுள்ளது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | மனித வள அபிவிருத்திக்கான, இலங்கை தேசிய சபையை ஆரம்பித்ததற்கான நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக பல்வேறுபட்ட துறைகளுக்கு திறமையானநிபுணத்துவ குழாத்தினை பேண வேண்டியது கட்டாயம் என்ற வகையில் இதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2014 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட கருத்திட்டப் பிரேரணைக்கு அமைவாக மின்னஞ்சல் கடித முகாமைத்துவ முறைமையொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வு ஆண்டு முடிவடையும் போது இதற்காக 106,050 ரூபா செலவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் குறித்த நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்தப்படவில்லை. | ஊழியர்களின் கணினித் தொழில்நுட்ப அறிவு போதுமானதாக இல்லை. பயிற்சி உத்தியோகத்தர்கள் நிறுவனத்தில் இருந்து விலகிச் சென்றமை மின்னஞ்சல் கடிதங்கள் மற்றும் Digital Signatures அரச நிறுவனங்கள் ஏற்றுக் கொள்ளுவதற்கு பின்நிற்பது போன்ற காரணங்களினால் இந்த முறைமை திட்டமிட்டவாறு பேணுவதற்கு தடையாக இருந்தது. | கருத்திட்டப் பிரேரணையைத் தயாரிக்கும் போது குறித்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் தடைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முச்சக்கர வண்டி சாரதிகளின் சமூக பொருளாதார நிலைமையை இனங்காணுதல் உட்பட 05 நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடுகளை நடத்துவதற்கும் மற்றும் விழிப்புட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கும் ரூபா818,399 செலவு செய்யப்பட்டிருந்தது. குறித்த கணிப்பீட்டுக்கு உரியதான அறிக்கையைத் தயாரிக்கு முறையான நடைமுறைத் திட்டமொன்று இல்லாது நியமிக்கப்பட்ட ஆலோசகர் ஒருவருக்கு ரூபா 60,000 செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் உரிய கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன் குறித்த நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லுவதற்கான வேலைத் திட்டமொன்று காணப்படாததால் செலவு செய்யப்பட்ட ரூபா 878,399 தொகை பயனற்ற செலவாக இருந்தது. | ஆய்வின் மூலம் வழங்கப்பட்ட சிபாரிசுகளுக்கு அமைவாக சுற்றுலாத் துறையில் முச்சக்கரவண்டி சாரதிகளை உறுதிப்படுத்தும் வேலைத் திட்டமொன்று இலங்கை சுற்றுலா சபையினால் ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்பொழுது இது நடைமுறையில் இல்லை. இதற்காக தொழிலில் ஈடுபடுகின்றவர்களுக்கு செயலமர்வுகள் நடத்தப்படுகின்றன. | சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வேலைத் திட்டங்களின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்யும் திட்டம் இருந்தல் வேண்டும் என்பதுடன் செலவு செய்யப்பட்ட தொகைக்கு ஏற்ற நன்மைகள் கிடைக்கின்றமை தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

## 3.4 அடையாளம் காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஒக்தோபர் 05 ஆந் திகதி விபத்துக்குள்ளான மோட்டார் வாகனத்துக்கு ஏற்பட்டிருந்த ரூபா 920,885 நட்டம் தொடர்பில் 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதியிட்ட PFD/RED/2015/08 பொது (i) இலக்கத்தைக் கொண்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 4.1 (அ) (ii) பந்தியின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பல்வேறுபட்ட துறைகறைப் பிரதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்பட்ட சுதந்திர விசாரணைக் குழுவினால் அதற்கு உரியவாறு | இந்த திருத்த வேலைகளுக்குரியவாறு காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் ரூ.86,039 தொகையொன்றை டொயோடா லங்கா நிறுவனத்துக்கு செலுத்தப்பட்டுள்ளது. மீதித் தொகையை வாகனம் கொள்வனவு செய்யப்பட்டு 05 வருடங்களுக்கு மேற்பட்டுள்ளதால் கொடுப்பனவு செய்ய முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொடுப்பனவை மேற்கொள்ளுவதனால் காப்புறுதித் தவணைக் | இந்த விபத்து காரணத்தால் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நட்டம் உள்ளடக்கியவாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தாலும் இதற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.<br>நீதிமன்ற தீர்ப்பின் மூலம் வெளித் தரப்பு ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டாலும் ஏற்பட்ட நட்டத்தை குறித்த தரப்பிடம் இருந்து அறவிட்டுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் சபையின் காப்புறுதியின் மூலம் ரூ. 834,846 தீர்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வாகனத்தின் காப்புறுதியுடன் தொடர்புடைய உரிமை கோராத ஊக்குவிப்புக் கொடுப்பனவும் இறத்தாகி இருந்ததுடன், காப்புறுதியில் மீள் நிரப்புச் செய்யப்படாத ரூ. 86,039 பெறுமதியான திருத்தச் செலவினம் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவு அதிகரிப்பதுடன் ஊக்குவிப்புக் கொடுப்பனவு இல்லாது போதும். |

## 3.5 பிரச்சினைக்கு உள்ளான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதியின்றி சபையினால் அரச துறையின் அலுவலர்களுக்கு வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒருங்கிணைப்பினை மேற்கொண்டு இலாபம் உழைக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் மீளாய்வு ஆண்டிலே ரூ.8,126,660 பெறுமதியான இலாபம் உழைக்கப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 18 ஆம் திகதிய இலக்கம் BD/HR 104/NHRDC/09/33 உடைய அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்தின் மூலம் மேற்கூறிய மிகையான தொகையினை அரசாங்க வருமானத்தில் வரவு வைக்குமாறு குறிப்பிட்டிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்காக மேற்கொள்ளும் பொருட்டு தேவையான அனுமதியினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகின்றது. | இப்பணியானது சபையின் நோக்கங்களுடன் தொடர்புபடாமையால் அதனை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் ஆலோசனை மற்றும் அனுமதி என்பவற்றினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்கீட்டுத் தன்மை மற்றும் நல்லாட்சி

-------------------------------------------------------

### 4.1 வருடாந்த தொழிற்பாட்டுத் திட்டம்

---------------------------------------------

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 திசெம்பர் 06 ஆம் திகதிய இலக்கம் DPMM/DG/037 உடைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் மூலம், அரச நிறுவனங்கள் தமது இலக்கினை அடைந்து கொள்வதற்கு கவனம் செலுத்த வேண்டிய முன்னுரிமை துறைகளை இனங்கண்டு அவற்றின் வெளியீடுகள் (output) அதன் பெறுபேறுகள் (outcome) என்பவற்றினை அளவிடக் கூடியவாறு அடிப்படை செயலாற்றுகை குறிகாட்டியினை நிறுவுவதற்கும் மற்றும் அதன் பிரகாரம் தொடர்ச்சியான செயலாற்றுகையை அளவிடக் கூடியவாறு நிறுவன பெறுபேற்றுச் சட்டகம் ஒன்றினை (Organizational results frame work) தயாரிப்பதற்கான கழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் சபையினால் அந்த ஆலோசனைகள் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | 2020 ஆண்டில் நிறுவன பெறுபேற்றுச் சட்டகம் ஒன்றினைத் (Organizational results frame work) தயாரிப்பதற்காக உரிய அலுவலர்களுக்கு தேவையான ஆலோசனைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. | வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் நிறுவன பெறுபேற்றுச் சட்டகம் ஒன்றினை தயாரித்து தொடர்ச்சியாக செயலாற்றுகையினை வேலைத்திட்டம் ஒன்றினை தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) 2018 ஆம் ஆண்டின் தொழிற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூ.1,050,000 பெறுமதியான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த 02 நிகழ்ச்சித் திட்டங்கள் ஆண்டு காலப் பகுதியினுள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் தொழிற்பாட்டுத் திட்டத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள், வெளியீடுகள் மற்றும் பெறுபேறுகள் என்பன தெளிவாக இருக்காமையாலும் மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் நிதிசார் செயலாற்றுகை தரவுகள் (Financial performance) உள்ளடக்கப்பட்டிராமையால், 2018 ஆம் ஆண்டிற்கான சபையின் முழுமையான செயலாற்றுகை பற்றி மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்ள முடியவில்லை. | எதிர்வரும் ஆண்டிலே உரியவாறு திட்டங்களை தயாரிப்பதற்கும் மற்றும் உத்தேச செயலாற்றுகையை அடைந்து கொள்வதற்கு தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. | வருடாந்த தொழிற்பாட்டுத் திட்டத்தை உண்மை அடிப்படையில் தயாரித்தல் வேண்டும். காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களை உள்ளடக்கி திட்டமிட்ட நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ளல் வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வு செய்யப்படுகின்ற முறையில் உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்வதற்காக நிருவாக சபையினால் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ள போதிலும், மீளாய்வு ஆண்டு முடிவடையும் போது கூட சபையின் உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நேர்வரிசை அமைச்சிடம் உள்ளகக் கணக்காய்வு அலுவலர் ஒருவரை நியமிக்குமாறு கோரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரப்படுகின்றது. | சபையின் தொழிற்பாடு தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்வது தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேணடும். |